ஓலை 30 | ஓசை 119 | டிசம்பர் 2022

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# வாழ்வியலும் வள்ளுவமும்



**கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்,
கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

**Translation:**

Learning is excellence of wealth that none destroy;
To man nought else affords reality of joy.

**Explanation:**

Learning is the true imperishable riches; all other things are not riches.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# தலைவணங்குகிறேன் கவிராஜனே!



புரட்சிக்கே வித்தகனாம் புவிதனிலே பாரதி
புதுமைக்கு விதைவிதைத்தான் புதுக்கவியின் சாரதி
குரல்கொடுத்தான் உரிமைக்கே குமுகாயம் மலர்ந்திட
குடிதோறும் பெண்ணடிமை கொந்தளித்தான் ஒழித்திட

சாதிகளை அகற்றிடவே சமத்துவத்தை வேண்டினான்
சரியாக பிள்ளைக்கு தகவாக ஊட்டினான்
மோதிமிதி என்றேதான் மொட்டுகளை ஏவினான்
முகிழ்கின்ற ரௌத்திரத்தால் முத்தெடுக்கக் கூறினான்

நேர்கொண்ட பார்வையினை நெஞ்சுயர்த்தி பாடினான்
நீக்கமற பாட்டாலே நிலைநிறுத்தி ஏகினான்
வேர்விட்ட பாக்களினால் விருட்சமதை தாங்கினான்
வீறுகொண்ட பாட்டதனால் வெள்ளையனும் நடுங்கினான்

மறவமதை எழுச்சியாக மனத்திற்குள் பாய்ச்சினான்
மறவாத தமிழன்னை மாண்பு புகழ் பாடுறாள்
அறம்சொல்லி நெறிகளையும் அழகாக புகட்டினான்
அனைவருமே சமமென்றே அரைக்கூவல் ஏற்றினான்

மண்மீதில் புதுப்பாதை வகுத்திட்ட ஞானியே
வகைவகையாய் கிளைப்பரப்பி வண்ணங்கள் தூவியே
எண்ணத்தில் பெருமாற்றம் எழுத்தாலே விதைத்தவன்
எவருக்கும் அஞ்சாதே என்றுரைத்த போதகன்

சிந்தனைகள் கீற்றாக சீர்திருத்தம் செய்தன
சித்தாந்தம் பாடித்தான் தீச்சுடரை ஏற்றின
விந்தைகளை புரிந்திடவே வித்தாக முளைத்தவன்
விடியலேற்றும் கிழக்காக விதியெழுதச் சொன்னவன்.

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# சோமசுந்தர பாரதி

தூத்துக்குடி மாவட்ட எட்டயபுர எட்டப்பர்
முத்தம்மாள் ஈன்றமகன்! சச்சிதானந் தசோமசுந்தரப்பேரார்!
பதினெட்டு நூற்றெழுபத் தொன்பதினது சூலைப்பேர்
திங்களதின் இருபத்து ஏழதனில் தோன்றிட்டார்!
எட்டயபுர ஜமீன்தார் பராமரிப்பில் வளர்ந்திட்டார்!
இவர்க்கு முன்பேஅரண்மனையில் பணியினராம்
சுப்ரமணி பேரினரின் நண்பரானார்! இருவருமே
கல்விதனில் பாடல்புனை ஆற்றலினில் திறன்மிக்கார்!
வந்தவொரு ஈழத்துப் பெரும்புலவர் ஈற்றடியை
தலைப்பாக தந்து பாவையாத்திடவே செப்பினர்காண்!
சுப்ரமணி சோமசுந்தரர் இருவருமே வென்றதனால்
"பாரதி"யெனும் பட்டத்தை இருவர்க்கும் வழங்கினரே!
சுப்ரமண்ய பாரதியும் சோமசுந்தர பாரதியும்
எட்டயபுர அரண்மனையில் அரசர்க்கு அணுக்கமாக
மிளிர்ந்தனரே! ஆற்றல்மிகு வழக்கறிஞ திறமையர்!
சிதம்பரனார் அழைப்பாலே சுதேசிகப்பல் நிறுவனத்தின்
நிர்வாகப் பொறுப்பேற்றார்! வ உசிமற்றும் சுப்ரமண்யம்
போன்றோர்தம் வழக்கினுக்கு வாதாடி வென்றாரே!
"தமிழ்க்கழகம்" அமைத்திட்டே ஆய்வுகளில் ஈடுபட்டு
தமிழ்வளர்ச்சி காண்வகையில் தொண்டேற்றார்! தீண்டாமை
ஒழிப்பனைய சீர்திருத்த பணிபலவும் ஆற்றினாரே!
பத்தொன்பது நூற்றினது ஐம்பத்து ஒன்பதனில்டி
சம்பர்தன் பதினான்கில் எட்டுபத்து வயதினிலே
மறைந்திட்டார் அன்னவரே! பேரறிஞர் அண்ணாவின்
ராமாயண எரிப்பெதிர்த்து முழங்கிட்ட நாவலர்தம்
நினைவுதினம் கண்டோமே! மீனாட்சி வசுமதியும்
நற்றுணையாய் உற்றவரே! ராஜாராம் லக்மிரதன்
லட்சுமியும் மீனாட்சி மாண்லலிதா காமேஷ்வர்
ஐவரினைப் பெற்றவரே! சிதம்பரனார் "தமிழ்க்கப்பல்"
என்றிவரை பாராட்டினார்! இருபாரதி யும்வாழ்கவே!



சோமசுந்தர பாரதியார்
(1879 – 1959)

கவிஞர் கணக்காயன்(இ சே இராமன்)

# அகநூல்


நூலகம் மனிதனின் சிந்திக்கும் கருவறை யாம்.
அகத்தினுள் சென்று ஆழமாக சிந்தித்து
அழகிய கருத்துகளை சேகரிக்கலாம்

எழுத்தாளனின் நண்பனாம்
அறிவினை வளர்க்கும் ஆலயம்

வரலாறினை வண்ணவியலாய் காணும் வனக் கூடம்

கேள்விக்கும் பதிலுக்கும் தொடர்புண்டு.
இவற்றின் ஆணிவேர் தான் நூலகமாம்

நூலகம் எனும் ஓர் கருவறை
எண்ணிலடங்கா குழந்தைகளை சுமக்கிறது
சுமையாக அல்ல சுகமாக.



நூல் அகத்தை சுமையாக கருதினாள்
புறம் என்பது வெறுமையாகிவிடும்
மனிதா!

நூலகத்திற்குள் செல்
இறைவன் அளித்த அறிவை கூர்மையாக்கு
பேணிய அறிவை மற்றவருக்கு ஈகையாக்கு.

கவிஞர் மகாலட்சுமி ராக்கியப்பன்,திருப்பூர்

# சுயகட்டுப்பாடு

சுதந்திரம் அடைந்தோம்
சுயத்தை இழந்து விட்டோம்..
சரித்திரம் பல புரிந்தோம்
சார்பு நிலை தனில் வகையாய் விழுந்தோம்.

அத்தனைக்கும் ஆசைப்படு என்பதன்
அர்த்தம் அறியாமல் போனோம்.
அடுத்தவனிடம் உள்ளதெல்லாம்
தனதாக்கி விட எண்ணினோம்.

ஆடத் தெரியாதவன்
தெரு கோணல் என்றானாம்..
அவ்விதம் அறிவிழந்து
அறியாமையில் பிதற்றினோம்.



என் நிலை இதுவென
எண்ண மறந்தோம்.
தன்னிலை மறந்து
தரணி ஆளத் துடித்தோம்!

ஆயினும் என்ன பயன்?

பார்வையை பறி கொடுத்து பக்குவம் பேசுவதா?
இறைவன் அல்லாத ஒரு ஆன்மீகப் பயணமா?
ஆழ்கடல் அமைதியை அறியாத வரையில்
பிறவிப் பெருங்கடலை நீந்துவாருண்டோ?

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க
என்பது அல்லவா வீரம்.
கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்
புலன்களை அறிதல் அல்லவா உண்மையில் ஞானம்!

அக உலகை அடைக்கி ஆள தெரிந்தவனே
ஆகச்சிறந்த சுதந்திர மனிதன்!

கவிஞர் மதுகை,திருச்சி

# தமிழினத் தலைவர்

மேதகு வே.பிரபாகரன்





உதிரம் உறைந்த
துயரத்தில் உருவானவன்
உலகம் வியக்கும்
துணிவில் நெருப்பானவன்

இதயம் இனிக்கும்
பேச்சில் இனிப்பானவன்
இமயம் உயரம்
பண்பில் கனிவானவன்

மழலைப் போல்
அன்பில் அழகானவன்
மனமும் உருகும்
அறத்தில் மெழுகானவன்

உலகமே எதிர்த்தாலும்
மண்டியிடா மறவன்
ஒழுக்கத்தில் தலைசிறந்த
தன்மானத் தலைவன்

புலிக்கொடி பிடித்த
புறநானூற்று கரிகாலன்
துவக்கு ஏந்திய
தமிழினத்தின் இறைவன்
தமிழினத் தலைவன்
மேதகு வே.பிரபாகரன்

கவிஞர் செ.பாலா,கரடி,திருக்கோவிலூர்

# விசம் முறி

நம்பிக்கை என்றெழுதி
ஒட்டப்பட்டிருக்கும்
புட்டியில்

துரோகப் பால்
குடித்தவர்கள்
அநேகம்

அவை
விஷமாகி
கொள்வதற்குள்

தன்னம்பிக்கை பால்
சுரக்க செய்திடுங்கள்.



கவிஞர் மணவை கார்னிகன்

# உயிர் காக்கும் நீர்நிலைகள்

உலக உயிர்களைக் காத்திட
இயற்கை உருவாக்கிய நீர்நிலைகள்
நீரோடை,சுனை,மடு,ஆறு
இன்று அருகிய நிலையில்
செயற்கை நீர்நிலைகளாம்,
அணை,ஏரி,குளம்.
இன்று நாம் காணும் காட்சி.
மழை பெய்திடக் கொள்ளளவு நிரம்பும்.
கோடையில் தரை காட்டி நின்றிடும்.



மலை வீழருவி அயத்தை நிறைத்து
தையெனக் குதித்து நிலமகளைத் தழுவி
இரு கரை அணைத்து சிற்றாறாய்
சலசலத்தோடும்.
அன்று,
ஊரார் பயன்படுத்த ஊருணி
உழவுக்கு ஏரிநீர்,
ஊரார் புழங்கிட குளம்,
மலர் நிறைந்த பொய்கை!
திருக்கோவிலருகே,கேணியும்,
அள்ளற் பழனமும்.

வயல் நடுவே,தோண்டியத் துரவு.
ஊரைத் தாண்டிப் பாயும் கயம்,
மலைப்பாறையிடையே
தானே கசியும் சுனை
வீட்டில்,கூவல், கிராமத்தில்
கால்நடைகள் நீரருந்த குட்டை
இப்படி இருந்த நீர்நிலைகள்
இன்று யாரும் அறிந்திடா நிலையில்.
இன்று நீர்நிலைகள் இருந்த இடம்,
அடுக்கு மாடி குடியிருப்புகளாக்கி
பணம் குவித்து கொண்டாட்டம்.
நாளை நீருக்குத் திண்டாட்டம் எனத்
தெரிந்தும்

உயிர்காக்கும் நீர்நிலைகளில் நெகிழி குப்பைகள்
சாயக் கழிவுகள் மருத்துவக்கழிவுகள் கலப்பு.
அருந்திய மக்கள் உயிரிழப்பு
நீர் வாழ்வினங்கள் செத்து மிதப்பு.
நீரைப் பேணும் மரங்கள் வெட்டிச்சாய்ப்பு.
மரங்களின்றேல் மண்ணில் உயிர்களில்லை.
உணர்ந்திடுங்கள்.

மரம்தனை வளர்த்து நீர்வளம் பேணுவோம்.
உயிர்காக்கும்
வான் அமிழ்தாம் நீரைத் தேக்கிடுவோம்.
நலமோடு வாழ்ந்திடுவோம்.

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# தென்காசியின் தெய்வீக அழகு




தென்காசி திருநெல்வேலியின் நகராட்சியாகுமே
இயற்கை எழில் கொஞ்சுமே
சில்லென குற்றால அருவியின் ஓசையில்
மக்கள் மனம் குளு குளுக்குமே
பருவ மழைத் தூறலுக்கு பெயர் போனதே
சாரல் மழை என அழைப்பாரே
தென்னகத்தே காசிய
விஞ்சிய உலகத் தலைவன்
கோயில் கொண்ட மாவட்டமே தென்காசி
தென்மேற்கு பருவக் காற்றின்
தலைவாசலாய் மழைப் பொழியும் மாவட்டமே
காவிரியின் வடக்கு கரையிலும்
தெற்கு கரையிலும் பாடல் பெற்ற
தலங்களை விட தென்காசி சிறப்பு வாய்ந்ததே
தென்றல் காற்று குற்றால மலையில் தோன்றியதே
மலைக்கு திரிகூட மலையென பெயர் வந்ததே
வைகாசி ஆனி ஆவடி ஆவணி
மாதங்களில் காற்றும் மழையும் மக்களுக்கு இதம் தந்ததே
சாரல் மழையில் குற்றாலம் திருவிழா கோலம் பூண்டதே
சாரல் காற்றில் நீராடி வந்தால் சரும நோய் நீங்குமே
இயற்கை எழில் கொஞ்சும் தென்காசியில் கோயில்கள் சிறப்பு வாய்ந்ததே
வாருங்கள் ஒருமுறை சென்று வரலாமே

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# குன்றென நிமிர்ந்து நில்

குடத்தில் இட்ட விளக்கல்ல பெண்ணேநீ
குன்றின் மேலிட்ட குத்து விளக்கு
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
உச்சமாய் பெண்ணிற்கு அணிகலன் அன்று
அச்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

இளங்கன்று பயமறியாது போலே வினைபுரி
துணிவும் கனிவும் இரு கண்கள் ஆகட்டும்
துணிந்து செயலை மகிழ்வாய் தொடங்கு
இன்பம் வந்திடும் தேடியே பலமடங்கு
ஆற்றல் ஊற்று எடுக்கும் கிடங்கு



ஆணுக்கு நிகராய் பெண்மையும் வெல்லும்
பெண்ணின் பெயரை வெற்றியே பகரும்
எதிராய் நிற்போரைக் கதிராய் தாக்கிடு
தொட்டிலை ஆட்டும் கையே உலகாளும்
பட்டியல் இட்டே செய்திடு பணிகளை
கவலையும் கண்ணீரும் துயரத்தைக் கூட்டும்
புலமையும் தலைமையும் திறமையைக் காட்டும்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணே!

உலை வைத்து சோறாக்கிய கரங்கள்
அணு உலையில் வேலை பார்க்கும் தரம் பெற்றுள்ளன
அடங்கிக் கிடந்தால் சிலந்தியும் சிறை பிடிக்கும்
இயங்க மறுக்காதே மயங்கி நிற்காதே

கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# தீவினையச்சம்

**அதிகாரம் : 21**

தீங்குதரும் செயல்கள்
தீக்கனலுக்கு ஒப்பாம்.
தீங்கு இழைக்க
அஞ்சுதலே சிறப்பாம்.

தீச்செயல்கள் புரிய
பாவிகள் அஞ்சார்.
மேலான சான்றோர்
அச்செயல் புரியார்.

தமக்கும் பிறர்க்குமே
துன்பம் தருதலால்.
தீயினும் கொடியதாய்
கொள்ளப்படும் தீச்செயல்.

தமக்கு இழைக்கப்படும்
தீமைக்காக தீங்கிழைத்தோரை.
மன்னித்து விடுதலே
தலையாய அறிவு.

கேடுதரும் தீச்செயல்களை
மறந்தும் நினையாதிரு.
நினைந்திடின் பெருங்கேட்டை
அறக்கடவுள் ஈந்திடுவான்.

வறுமை போக்கவேண்டி
தீச்செயல் புரிந்திடலாகா.
புரிந்திடின் முன்னிலும்
கொடும்வறுமை வாட்டிவருத்தும்.




தீவினைகளின் துன்பம்
துரத்துதல் விரும்பாதான்.
எவர்க்கும் தீச்செயல்கள்
செய்திடல் ஆகாது.

எக்கொடிய பகைக்கும்
தப்பி உய்யலாம்.
தீவினைப் பகையோ
விடாது துரத்தும்.

நிழல் உடலினைத்
தொடர்ந்து வருதல்போல்
தீவினையின் கேடும்
காலடியில் தங்கும்.

வழிதவறி நடந்து
தீச்செயல் புரியாதவன்.
தெளிந்த பண்புகொண்ட
கேடற்றவன் எனப்படுவான்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# கூடா நட்பு



பழையன கழிதல்
புதியன புகுதல்
எதிலும் சரி
நட்பிலென்றால்
அதுவே கூடா நட்பு.

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்,கும்பகோணம்

# மனையாளின் சுற்றுலா



வீடும் அலுவலுமாக
சிறுவட்டத்திற்குள் வாழும்
சினேகிதிகள் சிலர்
சலிப்பு மாற எண்ணியே
சின்னச் சுற்றுலா போக
சிலகாலமாய் திட்டமிட
சிலபல சாக்குகளுக்குபிறகு
சிலமணிநேரம் மட்டும்
சிறகடிக்க தீர்ப்பானது
சிறு வண்டியேறியே
சிங்காரமாக் கிளம்பிட
சிலநிமிடத்திலேயே
சிணுங்கியது அலைபேசி
சின்ன மகளின் அழைப்பு
சிற்றுண்டி மீதமென
மலைஅழகைக் காண
மூச்சிரைக்க ஏறும்போது
மாமியாரின் அழைப்பு
மாத்திரை எங்கே? என
மரங்களின் வனப்பில்
மனம்மகிழ்கையிலே
மகனின் அழைப்பு
மஞ்சள்சட்டைக் காணோமென
குளிருக்கு இதமாக
குடிக்க தேநீர் வாங்கும்போது
கணவர் காலை உண்டாரோவெனக
கவலை எட்டிப்பார்த்தது
காரமான மிளகாய்பச்சிக்
காண்கையிலே மகள்
கண்முன்னே வந்தாள்
கண் தானாகவே அடிக்கடி
கைக்கடிகாரம் கண்டது
கடைவீதிக் கண்டபோது
கைநிறைய அள்ளினோம்
காத்திருக்கும் வீட்டினருக்கு
அலுத்துக் களைத்து வீடுதிரும்ப
அடுக்களை போர்களமாயிருந்தது
ஆத்திரம் தீரக் கத்திவிட்டு
அத்தனையும் ஒழித்துக் கழுவி
அடுக்கிவைத்து நிமிர
அழகுக்கை நீட்டி
அன்புமகள் வாங்கிவந்த
அதிரசத்தைக் "கடிமா" எனக் கூற
ஆற்றாமையெல்லாம்
அப்படியேப் பறந்தோடி
அத்தனையையும் கடிக்க
அவள் பொய்கோபத்தில்
அப்பாவிடம் முறையிட
அம்மா பாவமென
அருமைமகன் கூறிட
பேதைமனம் மீண்டும்
வட்டத்திற்குள் சிக்கியது

கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# கானல் நீரில் பூத்த மலர்



இருள் சூழ்ந்த நிலவொளியில்
இல்லாளுடன் கைகோர்த்து நடக்க
விண்மீன்களும் வழி சொல்லும்
கதிரவனும் மறைந்து கொள்ளும்.

கவிஞர் ஏ.தேவராஜ், சென்னை

# ஈகை திறன்

ஈனவள் ஈன்றினாள்
இல்லம் தோரும் தேடினால்
மோகமது மோதி அச்சுக்கரு மீதி
அணல் வடிய தேடி
அடி வயறு நிரம்பவில்லை
இணையில்லா இணைந்து
வழியில்லா வாழ்க்கை கண்ணீரில் நனைந்து
கண்ணி இல்லா கன்னி இழந்து
கண்ணியம் மீறி காமம் கொண்டேன்
கருவை வளர்த்து
மறுவாழ்வை தொலைத்தேன்
குலம் சாடி உளை தாக்கி
உள்மனம் வீங்க
சேள் கண்டு சூள் கொண்டேன்
கொல்லை எடுத்து
சாழை அமைத்து
கூலம் பெருக்கி குவளை நிரப்பி
பட்டினம் சென்று வாணிபம் செய்து
தாளித்தேன் அங்கனை
தூலி கொடுத்தேன் அறிவை வளர்க்க
வாள் கொடுத்தேன் வீரம் கொள்ள
அறம் செய் என்றேன் அன்பு வளர
நன்னடத்தை சொன்னேன் மேம்பட
புதல்வன் வளர்ந்தான் திறம்பட
மதி மயங்கினான் ஒருத்தியோட
ஒதுக்கினான் என்னை தெருவோட
மன்றாடி கேட்டேன் மறுத்தான்
மனித வாழ்வு எதற்கு என்று எண்ணினேன்
மார்பகத்தை வெட்டினேன்
கருவறையை கீறினேன்
மாய்த்துக் கொண்டேன்
மறுவாழ்வுக்காக
பெண்ணாய் பிறப்பேன்
பெருவாழ்வு கொள்வேன்

கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# குன்றென நிமிர்ந்து நில்

அண்ட சராசரம் கொண்ட பூமியே
அகிலமும் பெரிது விண்ணும் பெரிதே
அகிலத்தை சுற்றிய கடலும் பெரிதே
அதிலும் சிரு துரும்பு நீயே

கடுகு சிறிது காரம் பெரிதே
கடுகாக நீயிருந்தாலும் காரம் கொண்டவனே
கடக்க வைப்பாய் மதியின் நுட்பத்தாலே
கடலையும் ஆளும் சக்தி உனதே



எட்டாத ஆகாயமும் உன் கையிலே
எட்டு திக்கும் வழிகள் உனதே
எறும்புபோல் சுறுசுறுப்பாய் இயங்கிடு
எதுவும் முடியுமென்பதை நினைவில்

சிறு முயற்சியில் உலகை வெல்லாம்
சிந்தித்து செயல்பட்டால் வெற்றி உனக்கே
சித்திரமாய் உயர்ந்த எண்ணங்களை வரைந்திடு
சிம்மாசனத்துக்கு ராஜாவாய் நீயும் ஆவாய்

ஆணவத்தை அடக்கி வைத்து விடு
ஆத்திரத்தை கை பிடியில் வைத்திடு
ஆதாயமற்ற பேராசையை தூக்கி எரிந்திடு
ஆயுதமாய் பொறுமையை கையில் ஏந்து

ஆழ்கடலாய் அறிவு உனக்கு உண்டு
ஆட்டம் காட்டலாம் கல்வியை கொண்டு
ஆடிடும் ஊஞ்சலாய் வாழ்க்கையை மாற்றலாம்
ஆட்சி செய்திடு நம்பிக்கை வேலால்

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்,மலேசியா

# வான வனம்

வனம் சொன்னது வானத்திடம்
நல்லவேளை நீங்கள் உயரே
நிலைபெற்று இருக்கிறீர்கள்!
என்னை அழித்து விண்ணை
முட்டும் கட்டிடங்கள் அமைக்கும்
இயற்கையைப் பேணத் தெரியாத
மனித அறிவிலிகளிடம் இருந்து
தப்பித்து விட்டீர்கள்!
பரந்த வனமும், வானமும் அவனைக்
காக்கும் கூடென்று அறியாமல்
என்னை அழித்து விண்ணை
அடையப் பார்க்கிறான்!
உன்னை அழிக்க வரும் முன்
அவன் அழிவான் என்று எத்தனையோ வழியில் நான்
காட்டினாலும் புரியாமல்
மேன்மேலும் தவறிழைக்கிறான்!
மானிடன் பட்டுத் தான் தெரிந்து
கொள்வான் என்று அமைதியாக
வேடிக்கைப் பார்ப்போம் நீயும் நானும்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.73

# அறிவு!

அறிவு என்பது நீரை போன்றது
குவளையில் பார்த்தால் அடைந்து கிடக்கும்
கடலில் பார்த்தால் விரிந்து கிடக்கும்
அறிவை குவளையில் அடைத்து பார்க்காதீர்கள்
அறிவை கடலைப் போன்று பாருங்கள்
உங்கள் வளர்ச்சியை இமயமும் பேசும்



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்

# தொலைதூர விடுதி

தொலைதூரத்தில் வதந்தியையும்,
இமைநொடியில் தொடர்ந்து தரும்,
தொ(ல்)லை காட்சிகளே!

தொலைவிலுள்ள காதலனின்,
கண் பார்வைக்கு கன்னியவள்,
காத தூரநின்று கலங்கினாளே!

தொலை பயணம் துணைவனையும்,
தொலைபேசியில் தொல்லை செய்யும் ,
துணைவியரே!



தொலைவிலுள்ள மக்கட் பசியையும்,
தூரத்தில் உள்ள தாயவளின்,
தொன்மனதும் தோய்ந்து ஏங்கிடுமே!

தூரத்திலுள்ள தோழியையும்,
துளி நொடியில் கண்டுவிட்டால் ,
கதகளி ஆடிடும் கண்மணியின் கருவிழிகள்!

தொண்ணூறுகளில் தொலைதூரத்தில்,
தொலைத்துவிட்டு மட்டற்ற மகிழ்ச்சியை,
மாபெரும் ஊரடங்கு மடியமர்ந்து மகிழ்ச்சியான,
மனக்கணக்கு விளையாட்டுகளை,
மாயவலை போட்டு பிடித்த மாமனிதர்கள்!

தொல்லை கொடுக்கும் பிள்ளையையும்,
தொலைதூர விடுதியில் விட்டுவிடா,
விருப்பமில்லா விதைத்தோர்கள்!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# பாரியன்பன் நாகராஜன் - கவிதைகள்

கிளுகிளுப்பை ஆட்டி
என்னழுகையை
நிறுத்த முயற்சிக்கிறாய்.
பசித்தப் பிள்ளையாய்
உன்முகம் நோக்கிக் கிடக்கிறேன்.
நேசம் மிகுதியினால்!
/
வைத்த பிடிசோறுக்கு
நான் அழைக்க வந்தது
ஒரு காகம்.
மற்ற காகமெல்லாம்
நான் அழைத்த காகம்
அழைத்தது.
/
உன் நினைவைப் பிழிந்து
சாறாய்க் குடித்ததுதான்
இந்த இரவில்
என் தூக்கமின்மைக்குக்கான
ஆகமுதற் காரணம்.
/
இருளடர்ந்த
இராத்திரி வானம்
பாதிநிலாக் கோப்பையில்
மது அருந்த.
நானும் நீயும் ஊடல் பிடியில்
காதல் செய்வோம் வா!




கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# குழந்தைப்பேறு

பெற்றெடுக்க தவம் இருக்கும் தந்தை -நான்
உன்னை தொட்டணைக்க
ஏங்கும் எந்தன் கைகல்தான்

வருடம் பல கற்பனையில்
உருவம் தந்து உனைவளர்த்தேன்
என் ஆண்மையின் அடையாளமே
உனைக் காண காத்திருக்கிறேன் - நான்



பெற்றெடுக்க உன்தாய்
தயாராக இருக்க- நீ
கருவுக்கு வெளியே நின்று
கண்ணாமூச்சி ஆடுவதென்னவோ?

பிறர் பிள்ளை சாயவைத்த - என்தோல்
என்பிள்ளை உனைச்சாய்க்க
பயிற்சிதான் எடுத்ததுவோ?

உன்தாயின் மார்பும்
பாலூட்ட தயாராய் இருக்கிறது
என்வேட்டியை ஊஞ்சலாக்கி
உன்னைத் தாலாட்டி தூங்கவைக்க
தகப்பன் நானும் தவிச்சிட்டு நிற்கிறேன்

எப்போது வருவாய்
என் உயிரே!

கவிஞர் ஹஸன்எம்பஜீத்,இலங்கை

# வழிப்போக்கன்

இவன் வழுப்போக்கனாய் உருமாறியப் பின்பு
வழியெல்லாம் அவன் தேடலாகவே மாறிவிடுகிறது

வழிப்போக்கன் எனும் பட்டத்தை சுமப்பதனால்
தெரிந்த இடங்களையும் தெரியாத வெளியூர் வாசியாக
கேட்டுக் கொண்டே செல்கிறான்

எல்லைக்கல்லில் வழிவாசிகள் உட்கார்வார்களாம்
யாருக்கும் சந்தேகம் வரவில்லை
உட்கார்ந்து எழுந்துவிட்டான்

காலில் குத்திய முள்ளினை எடுத்துப்போட நேரமில்லை
வழிகாமித்துக்கொண்டே போகிறான் பாதைக்கு
கேட்டால் வழிப்போக்கனாம்



வழிப்போக்கனின் கைப்பட்டு எறிந்த கல்
தொப்பென நதியில் விழுத்துதும் பயமேற்படுத்திவிட்டது
அடுத்த பத்தடிக்கு.

எப்படியும் கடந்தே தீரவேண்டும்
சொந்த ஊர்விட்டு வழிபோக்கனாய்
மாறி கடக்கின்ற தூரத்தை.

கவிஞர் சே கார்கவி,நாகப்பட்டினம்

# நீ தான் ராஜா

கலங்காதே மனிதா விழித்திடு நீ!
உன் முன்னேற்ற பயணத்தை
தடுப்பவர் யார்? தயங்காதே!
உனை தள்ளும் மனித ஓநாய்களை கவனியாதே!
தட்டி கொடுக்கும் மனித உள்ளத்தை மட்டும் பார்!
தோல்வியை கண்டு உன் வெற்றி பயணததிற்கு
வைத்திடாதே முற்றுப்புள்ளி
அது,உன் திறமைக்கு நீ வைக்கும் தடைப்புள்ளி
எந்த இடத்திலும தலை குனியாதே!
உனை நசுக்குபவர்களிடம் ஒருபோதும் பணியாதே!
விடாப்பிடியுடன் நிமிர்ந்து நில்
என்றும்,எந்த இடத்திலும் நீ தான் ராஜா

கண்ணாடியில் தோன்றும் உன் விம்பம் கண்டு
உனை தாழ்த்திடாதே!
கதைப்பவர்களின் பேச்சை கேட்டும்
உன் திறமையை குறைத்திடாதே!
கவனிப்பாரற்று போகும்
காகிதமாய் போக ஒருபோதும் நினையாதே! நிறுத்தாதே! - உன்
திறமையை தொடர்ந்து கொண்டிரு
சீக்கிரம் கிட்டும்; எட்டும் உன் வெற்றி.



உன் திறமையை நசுக்குபவர் யார்?
அவன் என்ன உன் உடலா? உயிரா?
உன் எதிரியின் பேச்சும்
உனக்கொரு உத்வேக பேச்சடா!
நட்டத்திலும் கஷ்டத்திலும்
இறைவனை மட்டும் நினை!
நண்பனை கூட நம்பாதே!
பார்க்கும் கண்ணாடியும்
சிலநேரம் பொய்யாக காட்டும்

திறமையை வளர்த்திட துணிவு கொள்!
நீ தான் ராஜா என்பதில் உறுதி கொள்!
வெட்டி பேச்சு பேசுபவனை தவிர்த்துக்கொள்!
உனை தட்டி எழுப்புபவனை அணைத்துக்கொள்!

மறந்திடாதே! மறுத்திடாதே!
உன் திறமைதான் உன் பலம்
உன் எதிரியின் பலவீனமும்
உன் திறமைதான்
மிதிப்பவனை தைரியமாக மிதித்து செல்!
முன்னேறிய உன் திறமையால்
அழிவில்லாத உன் முயற்ச்சியால்.

கவிஞர் ஏ.ஆர்.ரசானா,கல்முனை(இலங்கை)

# புரிதல்

புரிதலற்ற அன்பு
புறக்கணிக்க வைக்கும்
புரிந்துணர்வு முக்கியம்
புரிந்திட்டாப் பாக்கியம்!

பரிவு தேடிடும்
பிரிவை நாடாது
பரிதவித்து நிற்கும்
பிளவுகள் வராது!

பாசம் தரும்
பாவம் பார்க்கும்
பித்தாகி தேடவைக்கும்
பிரியமுடன் நாடும்!



கவிஞர் ஜெயா ஸ்ரீ,லண்டன்

# கடலும் கரையும்

கடலும் கரையும் காதல் சொல்லும்
அலைகளில் நினைவுகள் அசைந்தே கொல்லும்

பாதச்சுவடுகள் எண்ணத்தில் வடுக்களாய்
பாவை நெஞ்சத்தில் படியுதே துக்கங்கள்

நேசம் கொண்டேன் ஆசை வைத்தேன்
நலமாய் வாழக் கனவுகள் கண்டேன்

பிரிவைத் தந்து பேதையைக் கொன்றாய்
பாசத்தில் மெதுவாய் விரிசலை விரித்தாய்

அமைதியாய் இதயம் அழுகிறதே நாளும்
ஆதவனை விலகித் தவிக்குதே வானம்

அகலாத அகலாய் ஆனாய் எனக்குள்
ஆனாலும் மறைந்தாய் கானல் நீராய்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# மௌனமொழி எனதே

அலைகள் ஓரமாய் தள்ளிட்ட
கரையதிலே ஒதுங்கிய
நிசப்தம் நிறைந்த
கடற்சங்காய்.
புறமாய் கரம் கீறிடுவேன்
அகமாய் காதலாய் ரசித்திடுவேன்.

புரியா புதிரல்ல
புரிந்தால் சிறு புன்முறுவலும் உனக்கென
நிசப்தத்திலும் எண்ணிலடங்கா
சப்த அலைகள் செவியோரமாய்
அகம் குமுறலிட
ஆகச்சிறந்த மருந்தாய் காதல்.



சங்கை ரசிக்க மனமிருந்த
உறவுகளும் காரிகை இவளை
வெறுக்க காரணம் யாரோ?
ஒருவேளை நானே தானோ.

நான் எனும் மாயையே
எனை உணரா உறவுக்கும்
நட்புக்கும்
என்னில் ஏதுமில்லை.

அன்பின் மொழியை தவிர
அம்மொழியும் மௌனமெனவே..
கடலினால் ஒதுக்கிய சங்கின்
மொழிப்போல.

கரையோர கரம் ஒன்று ரசிக்க
நான் காத்திருப்பேன்.
மணலில் புதைந்த
புதையலாய்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# கருப்பொருள் தேடி

வாரக்கவிதை யொன்று எழுதிட எண்ணினாலது
வாராக்கவிதை யாகயென்னுள் தொக்கி நிற்கிறது!
தலைப்புதந்து கவிதையெழுதச் சொல்லும் போதுவரும்
தகிப்பொன்று எழுதெழுது என்று ஆர்ப்பரிக்கும்!
நானாகவொரு கவிதையெழுத எண்ணினால் என்பாடு
நாயின் பாடினும் பெரும்பாடாய் இருப்பதேனோ?

வைரமுத்து போன்ற கவிஞர்கள் இன்றும்
வசீகரமான சொற்களாலே வாசகரை சொக்கவைப்பதெப்படி?
விதவிதமாய் அமைக்கும் இசைக்கோர்வைக் கேற்றார்போல்
வனப்பான கவிதைகளை திரையிசைப்பாடலாய் ஆக்குவதெப்படி?
வளமான யாதவர்கல்லூரி தமிழ்த்துறையில் பயின்றபோதும்
வாரக்கவிதை யொன்றையடியே னெழுதாதுவாடு வதேனிப்படி?

வாய்க்கால் ஓரம்சென்ற போதும்பாட்டெழு துமாற்றல்
வாய்த்ததாலே பாரதியுமின்றும் மகாகவியாய் வாழ்கின்றாரே!
வாரக்கவிதை யொன்றுவொவ்வொரு வாரமுமெழுதிட வாடிடும்யானோ
பதிக்க நினைக்கிறேன் என்பெயரை கவியுலகில்
வையகத்தில் உன்னத கவிஞன் யானேயென்று!
வாங்க நினைக்கிறேன் நோபல்பரிசை ஆங்கிலகவிக்கு!




இருமொழி புலமை இருந்தும் அடியேனால்
இங்கிலாந்து நாட்டிலின்றுவரை காலாரநடை யிடவியலவில்லை
இந்தியறியாததால் இந்தியாவையும் சுற்றிவந்திட வில்லை!!
இயற்கையை ரசித்தாலுமதை கவிதையாக்க இயலவில்லை!
இமயம்போல் நிமிர்ந்தேநடக்க யிலாதயிவனைக் கவிதையிலிவன்
இமயமென்றுபிறர் வாழ்த்தும் வாழ்த்தொலியைக் கேட்பதெப்போதோ?

மனிதக்காதலைப் பாடலாமென்றால் பாடுமந்தவயது மில்லையெனக்கு;
மனிதக்காதலை இலக்கியமாய்க் கற்பிப்பவனா யினுமெனக்கு
கைவந்ததில்லை அன்றுமின்றுமது வெனக்கதுயேனோ யானறியேனே!
கடவுளை நேசிக்கும் மனமுண்டெனக்கு அதற்கு
கடவுள்காதல் கூடகைவந்த கலையாயில்லை யதுவுமேனோ?
கவிதைக்கோர் கருப்பொருள்தேடி யலைந்ததில் அகப்பட்டதிதுவே!

கவிஞர் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# இதயமே

கரு உருவாகும் போதே முதலில் உருவாகி
கல்லறை போகும்வரை நிற்காமல் உழைத்து
ஏக்கங்களை உள்ளடக்கி எண்ணங்களை ஒன்றிணைத்து
உடைந்திடாமல் உயிரை காக்கும் உற்ற நண்பன் இதயமே

இதயம் உறுதியாய் இருந்தால் போதும்
இமயத்தையும் காலடியில் கொண்டு வரலாம்
இதயம் சற்று தளர்ந்தால் இறகும் சுமைதான்
இதயத்தின் செயல்பாடே உயிரோட்டத்தின் வெளிபாடு

கல்லான இதயம் யாருக்கும் வேண்டாம்
கல்லாக்கி கொள்ள துணியவும் வேண்டாம்
இறைவன் படைப்பில் இனியது இதயம்
இறைவன் விரும்பும் இல்லமே நல்இதயம் தான்

இதயம் கோயிலானால் உள்ளே இருப்பது தெய்வமன்றோ?
தெய்வம் வாழும் ஆலயத்தில் தினமும் இன்பமே
இன்பமாய் இருந்துவிட்டால் இனித்திடுமே வாழ்க்கையுமே
வாழ்க்கையில் வசந்தங்கள் வீசிட துவங்குமே

கோபவைராக்கியம் கொண்டவரோ கொல்லுகின்றார் இதயத்தினை
காமவிகாரம் கொண்டவரோ அழிக்கின்றார் மாண்புதனை
இருண்ட இதயம் கொண்டவரோ இறக்கவே துடிக்கிறார்
கடின இதயம் கொண்டவரோ கல்லாகிப்போகிறார்

மனிதனை தெய்வமாக்குவது தூய நினைவுகளே
மனிதனை மிருகமாக்குவது தீய எண்ணங்களே
நினைவுகளையும் எண்ணங்களையும் அழகாக்குவோம்
இதயத்தை இமையாய் காத்துக் கொள்வோம்



இனிய நினைவுகளை பத்திரப்படுத்துவோம்
கசப்பான காயங்களை மறக்க முயற்சிப்போம்
மனிதனை தீட்டுப்படுத்துவது இதயமே எனில்
இதயக் கழிவுகளை இன்றே அகற்றுவோம்

ஒரு நொடியும் ஓயாமல் எனக்காக துடித்திடும்
இன்ப துன்பத்தை தூக்கிச்சுமந்திடும் இதயமே வாழியவே

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# பாரதி


பாரதி எனும் பெயர் கொண்டு
பாரதத்தையே கவிகளால் ஆட்டி வைத்த
பாருலகின் சாரதி அவன்!

உன்னத மனதை தான் கொண்டு
உலக உயிர்களின்
அறியாமையை விலக்கிய
உத்தம கவிஞன் அவன்!

"அச்சமில்லை அச்சமில்லை" என்று சொல்லி
அச்சம் இல்லா துணிச்சல் தந்த
அஞ்சா நெஞ்சன் அவன்

"பாருக்குள்ளே நல்ல நாடு" என்று
பாக்கள் பல படைத்து நமக்கு
பாதைக் காட்டிய வழிகாட்டி அவன்!

"வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம்" எனும்
விந்தை மனிதர்களை எல்லாம் மாற்றிய
விடுதலை பெண்ணடிமை போராளி அவன்!



தாய் மண்ணை தான் திலகமிட்டு
தர்மத்தை பாரெங்கும் பரவச் செய்த
தர்மத்தின் காவலன் அவன்!

முறுக்கு மீசை ஒன்றை வைத்துக்கொண்டு
முறபோக்கு சிந்தனை உடைய கவிகளை
முன்னரே விதைத்த உழவன் அவன்!

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என
பாகுபாடு பாராத மாமுனி அவன்!

"காணி நிலம் வேண்டும்" எனும்
கவிதையிலே கட்டுக் கட்டான பல
காலநிலைகளை உருவாக்கிய
படைப்பாளி அவன்!

எத்தனை எத்தனை வரிகளாக கவிதைகள்
எழுதினாலும் மிகையாகாது எம் மனதை தன்
எழுத்துக்களால் ஆளும் "பாட்டுக்கு ஒரு புலவன் பாரதிக்கு....!"

கவிஞர் க.ராஜேஷ்,சிதம்பரம்

# மாமன் பெத்த மரகதம்

அசஞ்சு,அசஞ்சு நடக்கயில
அசந்து நிக்குறேன்டி

சிமிட்டி சிமிட்டிப் பாக்கயில
செதஞ்சு போறேன்டி

கொனட்டி,கொனட்டிப் பேசயில
கிறுக்குப் பிடிக்குதடி

முங்கி,முங்கி குளிக்கயில
மூச்சு வாங்குதடி

நெருங்கி,நெருங்கி வரயில
நெஞ்சு வெடிக்குதடி

மாமன் பெத்த மரகதமே!



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்



அகர முதல

# பாரதப் புலவன் பாரதி

ஏழு வயதில் பாட்டு எழுதிய இலக்கிய தீபம்.
எட்டயபுரத்து கவிஞன்.

தோட்டாக்கள் தோற்றுவிடும்
எதிரிக்கும் பயத்தால்
வியர்த்து விடும்
போர்வாள் கூர்மை பெறும்
புரட்சிக்கவியின்
வார்த்தை வரிகளால்.

அன்றைய நிராசைகளைப் பட்டியலிட்டு
சொப்பனத்தில் சுகம் கண்டவன்

காக்கை குயிலினுக்கு
காவியம் படைத்திட்டான்
விடுதலை வேட்கை கொண்டு
சுதந்திரப் வேட்கையிலும்
கவிப் பயணம் சென்றான்.

மடமையை தீயில் இட்டான்
மகளிர் குடும்ப விளக்கென
சமூகத்திற்கு பறைசாற்றி
சுதந்திரத்திற்க்கு முழக்கமிட்டான்.

எமன் கூட எதிரில்
வரப்பயந்து
யானை வடிவில் வந்து
பாதி உயிரை
பயத்தில் அரைகுறையாக
விட்டுச் சென்றான்

முறுக்கு மீசை வீரனவன்
முண்டாசு காரனவன்
கவிச்சுடரை ஏந்தி நின்று
வெள்ளையனை விரட்டிய
மகாகவி பாரதிக்கு
வீர வணக்கங்கள்.




கவிஞர் ஞா.போனிபாஸ்,கடலூர்

# ஹைக்கூ கவிதைகள்

1

நடுங்கும் பனியில்
மெல்ல வளர்கிறது
உயிர்களிடத்து காதல்.

2

இன்னும் பழமை மாறாமல்
மலைக்கோயிலுக்கு அழைத்துச்செல்கிறது
மிதிபடும் படிக்கட்டுக்கள்.

3

வெகுநேரமாக மிதந்து கொண்டிருக்கிறன
மீட்புபணிக்கு யாரும் முன்வரவில்லை
குளத்தில் மேகங்கள்.



4

பக்தியோடு கோவிலைத்
தரிசித்துச் செல்கிறது,
ஆற்றுநீர்!

5

ஆற்றுக்குள் இருந்து,
மேலேறிச் சென்றுவிட்டது,
ஒற்றையடிப்பாதை!

கவிஞர் அ.செல்வராஜ், க.நா.ஊர்,உடுமலைப்பேட்டை

# முன்னேற்றம்

முன் சென்று ஏறி
முயற்சி மட்டுமே
முதன்மைக் கொண்டு
முடிந்தால் மனதில்
முடியாதது அல்ல
முத்தமிழ் என்றென்றும்
முத்தாய்ப்பாக
முத்திரை வாழ்வுத்
தந்திடுமே



கவிஞர் பொ.சுப்புலட்சுமி,தேவகோட்டை

# இனியொரு விதி செய்வோம்

தடைதனை உடைத்திடுவோம்
ஒரு விடைதனை அடைந்திடுவோம்
மடைதனை உடைத்திடுவோம்
ஒரு ஆற்றுவெள்ளம் போல் புறப்படுவோம்
இனி ஒரு விதி செய்வோம்

புயலாய் சென்று
பகைதனை வென்று
சுயம்தனை காத்து நின்றிடவே
இனி ஒரு விதி செய்வோம்



ஒன்றாய் சேர்ந்திடு
உறுதியை பூண்டிடு
எதிர்படும் அனைவரும் அலர்ந்திடவே
இனி ஒரு விதி செய்வோம்

மரணமோ ஜனனமோ
இது எழுந்திடும் திருணமோ
ஒரு விடியலும் இங்கே புலர்ந்திடவே
இனி ஒரு விதி செய்வோம்

மனதினில் புழுகி
மண் தனில் அழுகி
மாண்டிடும் மானிடம் தழைத்திடவே
இனி ஒரு விதி செய்வோம்

ஏழையை வளர்க்க
ஏளனம் தடுக்க
எரிமலை போலே எழுந்திடவே
இனி ஒரு விதி செய்வோம்

வாட்டும் வலிதனை
காட்டும் நபரினை
காட்டு தீ போலே எரித்திடவே
இனி ஒரு விதி செய்வோம்

மாற்றம் வரும் என
பார்க்கும் நபர் வலி
விரைவாய் சேர்ந்து தீர்த்திடவே
இனி ஒரு விதி செய்வோம்

எவர்கை தடுக்கும் லஞ்ச
காக்கைகள் பறக்கும்
சினம் கொண்ட சிறுத்தையாய் சீறிடுவோம்
இனி ஒரு விதி செய்வோம்

கவிஞர் ப .உ.முகிலன்,மதுரை

# ஆசானாகிறேன்

புத்தகப் பெட்டியை திறந்தே
வைத்திருக்கிறேன்

தோட்டத்தில் பூக்களும்
வளர்க்கிறேன்

அகந்தையில்
நான் எழுகையில்

சுயநலமாய்
கைகள் மூடுகையில்

கோபக் கத்தியின்
கொடுமுனை பிடிக்கையில்

ஒரு புத்தகம் எடுக்கிறேன்!



மன்னித்தல்களின்
யாசகத்தில்

பிறர் வலியில் எனை
பொருத்திப் பார்க்கும்
பக்குவத்தில்

நேர்மைத் திமிரின்
கர்வத்தில்
பூக்கள் நுகர்கிறேன்!

எண்ணங்களை
பரிசீலிக்கிறேன்
தூசி தட்டுகிறேன்
தூய்மை செய்கிறேன்

ஒவ்வொரு நாளின்
இறுதியில்
என்னை நானே
அரவணைத்து முத்தமிடுகிறேன்
எனக்கு நானே ஆசானாகிறேன்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# கல்வியைப் பயிரிடு (பயின்றிடு)

கல்விப் பயிர் கற்பவர்க்கு உயிர்
நல்லறிவு செழிக்கக் களைகளைத் தவிர்

உரமாய் உழைப்பைத் தரமாய் ஊற்று
கரம்சேரும் வரமாம் அறிவு ஊற்று

துளிர்த்திடும் இலைகள் அடக்கமும் ஒழுக்கமும்
தளிரதிலே பசுமைத் தொடக்கம் பிறக்கும்

பயிரது வளர்ந்து விருட்சமாய் மாறும்
பற்பல கிளைகளும் பரவியே விரியும்

கிளைகளில் பூக்களும் காய்களும் கனிகளும்
விளைச்சலாய்ப் பெருகிடும் பேரின்ப இனிமையும்

மரத்தின் மகிமையே மரம்நிறைக் காய்களே
மனிதனில் பெருமையே மனம்நிறைக் கல்வியே



மன்னனும் அடையாத சிறப்பைத் தந்திடும்
மண்ணிலே உன் பிறப்பின் பலன்தரும்

விண்வரை உன் புகழது ஓங்கிடும்
கண்ணுடையவன் நீதான் கண்ணியம் குவிந்திடும்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி,(இலங்கை)

# சிட்டுக்குருவிகள்

அடைக்கப்பட்ட தண்ணீர்குழாயிலிருந்து
சொட்டு சொட்டாய் கசிந்து வீணாகும் நீர்
சிறு நதியைபோல ஊர்ந்து

நனைத்த மொத்ததூரத்தையும்
பாசிபடர்ந்து பசுமையாகவே
கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது

குழாயை சரிசெய்ய அழைத்து
அஞ்சாறு நாளாகியும்
ஆளையும் காணோம்
வேலையும் முடியலயென
புலம்பியபடி தானேசெய்திட ஆயத்தமானான்



ஆகாயத்தின்
அக்னிவெயிலில் பறந்து
கூட்டமாய் வந்தமர்கிறது சிட்டுக்குருவிகள்
மதில்சுவரின்மேல்

விளையாடிக்கொண்டிருந்த மகள்
வீட்டிற்குள்ளிருந்து -இரு கைகளில்
அள்ளிவருகிறாள்
கூடையிலிருந்த அரிசியை
உதடுகள் விரிந்து புன்னகையோடு
அள்ளிவீசுகிறாள் அரிசியோடு சந்தோசத்தையும்

சிறகுகள் படபடவென அசைத்து பறந்து வந்து
வாசலில் வீசிய அரிசிகளை பொறுக்கும்
ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு பெயரை வைத்தே அழைக்கிறாள்

தன் சிறகுகளை அசைத்து
கீச் கீச்சென சத்தங்களெழுப்பி
வெகுநாட்களாய் கசியும் சொட்டுநீரில்
சிறுஅலகால் தாகத்தை தீர்த்துகொள்கிறது ஒவ்வொன்றாய்

இப்படித்தான் தினமும் வந்துபோகுமென
ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வீட்டிலிருக்கும் அப்பாவிடம்
மகள்சொன்னதும் கையிலிருந்த பழுதுநீக்கும் கருவிகளை
எடுத்தபைக்குள்ளேயே பத்திரப்படுத்தி வைத்தார்.

கவிஞர் கோவை ஆனந்தன்,குமாரபாளையம்(கிணத்துக்கடவு)

# காதலின் தூதுவன்

மறவேனடா
பேசாப் பொழுதிலும்
விடைப்பெறா உன் நினைவுகளை.

அறிந்தேனடா
பேசாமல் தவித்துத்
தனித்துப்போன என் மனதை.

பகிர்ந்தேனடா
ஆயிரம் அர்த்தங்கள்
கொண்ட ஓர் கவிதையை.

புரிந்தாயடா
மாறாத, வலிமையான
அன்றிருந்த அதே காதலை.



பார்த்தாயடா
அழுது தீர்த்த
கண்ணீர் அற்ற விழியை.

அணைத்தாயடா
ஆறுதல் தரும்
உன் நெஞ்சில் என்னை.

கோர்த்தாயடா
கழுத்தில் தாலியேற்றும்
கரத்துடன் என் கரத்தை.

கடந்தேனடா
உனக்கானவளாய் உன்னுடனே
என் வாழ்க்கைப் பயணத்தை.

பிரியேனடா
உயிரிலும் மேலான
என்னில் கலந்த உன்னை.

கவிஞர் சன்ஹா நிஜாம்,இலங்கை (புத்தளம்)

# காதல் சொல்ல வந்தேன்

அன்றொருநாள் என்விழி கடந்த ஏந்திழை
மற்றொருநாள்  காணாதவரை எனக்குள் பேரிழை
வருங்கால வாழ்க்கையை சிந்திக்க மறுக்கிறேன்

வரப்போகும் உன்னையே
நித்தமும் சிந்திக்கிறேன்

உனக்கேனும் தெரியாமல் நம்காதல் வேர் காய்கிறது
என்றைக்கேனும் ஒருநாளாவது
மறவாமல் நீர்வாறு

பனியைத் தாங்கும் புல்லின் நுனியைப்போல்
கன்னி உனைக் காத்திருப்பேன் கண்மணியைப்போல்
எப்போது வருவாய் மீண்டும் என்னெதிரே
அதுவே என்வாழ்வில் பெரும் பாக்கியமென்று
உன்னிடம் காதல் சொல்ல வந்தேன்

திலகத்தோடு பார்த்ததில்
திக்குத் தெரியாமல்
திகைத்துப்போய்  விதியென வீதியில்
கடைசிப் பேருந்தை தவற விட்டவனாய்



கவிஞர் லா.பெனிஸ்,தமிழ் மருத்துவர்

# தன்னம்பிக்கை கொண்டெழுந்திடு

இலட்சியத்தை
முடிவு செய்து விட்டால்
ஒவ்வொரு
எட்டையும் சாதனையின் சோதனையாய்
ஏற்று நிதானமாய் கடந்திடு.

எட்டின் இடைவேளி முட்களாளோ கற்களாளோ
நீண்டிந்திருந்தாலும் குறிக்கோள் குறையாமல்
சருகளில் தளராமல் தன்னம்பிக்கைக் கைக்கொண்டு
நிதானமாய்க் கடந்துவிடு.

வெற்றிப்பயண முடிவில் திரும்பிப்பார்
நீ கடந்த ஒவ்வொரு எட்டும்
உன் சாதனையின் ஏணியாய் இருந்திருக்கும்.



கவிஞர் ஷபானா ஆதம் லெப்பை,ஓட்டமாவடி(இலங்கை)

# காத்திரு நண்பா

ஆழ்ந்து சிந்தி அறிவு பெருகும்
வாழ்ந்து நிரூபி வாழ்த்துகள் பெருகும்

நன்றி சொல்லியே நாக்குத் தள்ளும்
பன்றிக் கூட்டங்கள் பயந்து ஓடும்

குனிந்து பார்த்த கூனன்கள் எல்லாம்
நிமிர்ந்து பார்க்க நிலைமை மாறும்.

சிரித்த வாய்கள் சிலிர்த்துப் பேசும்
மலர்ந்த கேலிகள் மறித்துப் போகும்.

மட்டம் தட்டிய மகேசன்கள் நாக்கும்
விட்டம் பார்த்து வியந்து பேசும்.



ஏளனங்கள் எல்லாம் எட்ட நிற்கும்
கிண்டல் மொழிகள் கிழிந்து தொங்கும்.

முட்டிய பாறை முறியக் கூடும்
விட்டில் பூச்சி விமானம் ஏறும்.

ஞாலம் போற்றும் நாளும் வரும்.
காலம் கனிந்திடும் காத்திரு நண்பா!

கவிஞர் மதுரகவி,மதுரை

# அவள்

கண் இமைகளால் கட்டி இழுக்கின்றாய்.
காந்த விழிகளால் என்னை
தலையாட்ட வைக்கின்றாய்.

உந்தன் உதடுகள் புன்னகை பூப்பதால்
மூக்கின் நுனியும் சிவக்கின்றது.

உதடுகள் சொல்ல துடிக்கின்ற வார்த்தைகளை எல்லாம்
கருவிழிகள் இரண்டும் கண்ணாடியாய் காட்டுகின்றது.

காந்தப் பார்வை கொண்டு என்னோடு போர் செய்கின்றாய்.
கடைசியாய் வீழ்ந்து கிடப்பது என்னவோ நான்தானே.



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை - சாப்டூர்

# கருவறை

அம்மா
உன்னை எட்டி
உதைப்பதால் என்னவோ
உன்
உயிரையும்
என்
உயிரையும்
கையில் பிடித்துக் கொண்டு
என்னை
பத்தாவது திங்களில்
பெற்றெடுக்கிறாயோ?
இனி
உன்னை
உதைக்க மாட்டேன்
உறங்க வைப்பேன்
உணவை உண்ண வைப்பேன்
உள்ளம் குளிர வைப்பேன்
உன்னுடனே இருக்க ஆசை
கிடைக்குமா?
உன் கருவறை இறுதி வரை



கவிஞர் தி.சரவணன்,சங்கரன்கோவில்

# நான் பச்சைத் தமிழன்

தமிழ்!
ஊரிலும் இல்லை பேரிலும் இல்லை;
உணவிலும் இல்லை உணர்விலும் இல்லை;
உறவிலும் இல்லை பிரிவிலும் இல்லை;
நடையிலும் இல்லை உடையிலும் இல்லை;
படிப்பிலும் இல்லை நடிப்பிலும் இல்லை;
படிப்பதும் இல்லை பிடிப்பதும் இல்லை;
நட்பிலும் இல்லை நகைப்பிலும் இல்லை;
கட்டிலிலும் இல்லை தொட்டிலிலும் இல்லை;
பட்டிலும் இல்லை பாட்டிலும் இல்லை;
பண்பிலும் இல்லை பணியிலும் இல்லை;
பேச்சிலும் இல்லை மூச்சிலும் இல்லை;
பிறப்பிலும் இல்லை இறப்பிலும் இல்லை;
ஆனாலும்!
நான் பச்சைத் தமிழன்!







கவிஞர் த.அருள் ஞானப்பிரகாசம்,சேத்தியாத்தோப்பு

# இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்

அன்னலெட்சுமியாய் அகிலத்தில் அவதரித்து
அன்பெனும் ஒற்றைச் சொல்லால்
என்னைக் கவர்ந்திழுத்தீர்!

ஆதரவுடன் தலை கோதி ஆறுதல்தனை உரைத்து
ஆசானாய் வலம் வந்தீர்!

இன்பமே இனிமை என்று
இன்புற்று வாழ்ந்திடவே இன்பமாய் கூறினீர்!

ஈகையே சிறந்தது என்று
ஈகைப் பண்பை விதைத்திட்டீர்!

உன்னால் முடியும் என்று
உற்சாகமாய் உரைத்திடுவீர் நிதமும்!

ஊர் போற்ற வலம் வருவாயென்று
ஊஞ்சலாடும் உணர்வைத் தந்திட்டீர்!

என் தங்கை என்று தங்களின் மனதில் நிறுத்தி
எனது சுக துக்கத்தில் பங்கெடுத்தீர்!

ஏணியாய் நின்று உயர்த்தினீர்
ஏகாந்தம் தான் உம்முடன் இருக்கையிலே!

ஐயமது களைந்திடச் சொன்னீர்
ஐயமின்றி வாழ்ந்திட நேர்மைதனை போதித்தீர்!

ஒவ்வாத விடயங்களை கை விட்டு
ஒற்றுமை உயர்ந்தது என்றீர் மகிழ்வாய்!

ஓதுவது உயர்வென்று நிதமும்
ஓதிடுவீர் அனைவரின் நலனுக்காகவே!

ஔவைப் பாட்டியின் வழி நடந்து
ஔசிதமாய் வாழ விழைந்திடும்

எனதருமை அக்காவிற்கு
இனிய அகவைத் துளிரநாள் நல்வாழ்த்துகள்

இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்
அன்னலெட்சுமி சரவணன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

கவிஞர் கோமதி,பொள்ளாச்சி

# நாளையிந்தியா நம் சேற்றில்!

மக்களுக்கான விவசாயம் அன்று;
பெரும் வணிகர்களுக்காக இன்று.
வாழ்க்கையின் ஆதாரமாய் இருந்தது ;
விவசாயிகளை எலிதின்ன வைக்கிறது.
உணவே மருந்தாயிருந்த நிலை;
மருந்தே உணவாயான கவலை.
பயிர்களை உயிர்கள் ஆக்கியோர்;
இன்று களைகளாய் மடிகின்றனர்.
போதும் உங்கள் அறிவியல்;
மண்ணைப் புண்ணாக்கும் அரசியல்.
அறுவடைக்காக மட்டும் குனிவோம்;
ஆணவத்தை எதிர்க்க நிமிர்வோம்.
அன்பை விதைக்கும் நாம்;
அக்கிரமத்தை நிச்சயம் வேரறுப்போம்.
நாளையிந்தியா நம் சேற்றில்!




கவிஞர் ராஜு ஆரோக்கியசாமி,திருச்சி

# கரை தொடும் நிலவு

உள்ளங்கையில்
‘வானம்’
உனக்கு மட்டுமே தெரியும்
‘நிலவு’
நிலவின் கண்களில் தெரியும்
‘நீ’

இறக்கை உடுத்தி
இதோ
வரிகளில் விழுந்து
கண்ணில் தெரியும்
கவிதையில் கரையுமாம்

கரை தொடும் நீரிலும்
கலங்கமில்லா நிலவு
மிதப்பதில்லையோ.



அதுபோல் உண்டென்று
அலை தள்ளிய காற்று
காதில் கிசுகிசுத்தது
செவி விழுந்தது!

கவிஞர் பா.ஜெயப்பிரபா,சென்னை 81

# புதிய தொடக்கம்

எரிந்து கொண்டே இருப்பதால்
'சூரியன்' எரிந்து விடுமா

தினம் தினம் தேய்வதால்
'நிலவு' தான் தொலைந்து விடுமா

புயலில் சாய்ந்திடும் போதும்
காற்றை பிரசவிக்க மறுக்கிறதா மரம்?

எத்தனை முறை இடறி விழுந்தாலும்
மறுபடி மறுபடி எழுவதில்லையா மழலை



கல்லறைகள் நிரம்பி வழிந்தாலும்
காதல் துளிர்ப்பதில்லையா

விடிந்து விடிந்து அலுத்து விட்டதென
ஓய்வெடுக்கிறதா இரவு

கண்களை மூடி திறக்கும் அந்த
கணத்திலும் காலம் ஓடவில்லையா

எல்லாம் இங்கு புதிய தொடக்கம்
உன்னையும் என்னையும் போல.

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்

# உன்னதப் பூ பாரதி

இந்திய நந்தவனத்தில் தமிழ்நாட்டில் மலர்ந்த உன்னதப் பூ பாரதி

பாரதி என்றாலே கலைமகள் என்றனவாம்.
நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும்,இவன் பெருமை
சொல்லில் அடங்காது.அவன் எழுதாத இலக்கியம் ஏதேனும் உள்ளதா?
"சொல் ஒன்று வேண்டும்.தேவ சக்திகளை,நிலை பெறச் செய்யும்
சொல் வேண்டும்".மனதையும், பெண்ணாக பாவித்து, "மனமென்னும்
பெண்ணே! வாழி நீ கேளாய்"என்றான்.
"பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே"என்றான்.
"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு"என்று நாட்டின் மீதும்
தமிழ் மொழியின் மீதும் அளவு கடந்த அன்பை வெளிபடுத்தி
"என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்று
மடியுமெங்கள் அடிமையில் மோகம்" என்றும்,
"வந்தே மாதரம் என்று முழங்கி மக்களிடையே
சுதந்திர தாகத்தை ஏற்படுத்தி எதற்கும் அஞ்சானாய் நின்றான்.
"சின்னஞ்சிறு கிளியே, கண்ணம்மா செல்வக் களஞ்சியமே"!
நீ ஆலயம் எழுப்பு, சத்திரங்கள் கட்டு.ஆனால் ஏழைக்கு
கல்வி கொடு என்றான்.
அவன் அன்று, விடாமுயற்சி கொண்டு பல செயல்களில்
ஈடுபட்டதால் தான் நாம் இன்று அதன் உன்னதத்தை
அடைந்து கொண்டு இருக்கிறோம்.
"அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பது இல்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்"
புரட்சி கவிஞன் இவனன்றோ?
காசிக்குச் சென்றும் கல்வி கற்றும் கவிதை பகர்ந்தான்
புதுவைச் சென்று புதுமைகள் புனைந்தானே!
காற்றுக்கும் வந்தனை செய்து
"மலைக் காற்று நல்லது,கடற்காற்று மருந்து
வான் காற்று நன்று என்றும்,
ஊர்க்காற்றை,மனிதர் பகைவனாக்கி விடுகின்றனர்" என்றானே.
பாஞ்சாலி சபதத்தை கவிதையாக்கி காவியமாக்கியவன்
அவன் புகழ் வையகம் உள்ளளவும்
இருந்து கொண்டே இருக்கும்.



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# கடினமானது அல்ல

வாழ்க்கை
கடினமாகத் தோன்றும்போது
சிறிது நேரம் கண்கள் மூடி
பயணிப்போம்
கடந்த கால புன்னகைகள் நோக்கி
காரணமின்றி
காட்டப்பட்ட அன்பும்.
பெயரில்லா உறவில் தோன்றிய நேசமும்.
நானகருக்கிறேன் என்று கைக்கோர்த்த
வார்த்தைகளற்ற ஆறுதல்களும்.
நமக்காக உடன் நின்று
யாரோ ஒருவராய்
பின்னர்
இன்னொரு நாமாக
நம்முடன் பயணிக்கும்
வேசமில்லா அன்பும்.
கூறாமல் கூறும்
வாழ்க்கை பயணம்
அவ்வளவு
கடினமானது அல்ல என்பதை.



கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை ஈரோடு

# இனியும் வேண்டாம் தீண்டாமை

(சோமசுந்தர பாரதி)

எட்டயபுரம் தந்த  இருமுத்துகளில்
ஒருவரானவரே
சத்தியானந்த சோமசுந்தரம்
என இயற்பெயர் கொண்டரே

பாரதியாரின் உயிர்தோழரே
இருவரும் ஒரே நேரத்தில்
பாரதி என பட்டம் பெற்றனரே

அரண்மனையில் அரசியாரின்
தத்து பிள்ளையாய் வளர்ந்தவரே
தமிழாய்வு செய்வதில் வல்லவரே

வ உ.சி.யின் கப்பலில் செயலாளராகப்
பணியாற்றினாரே
மதுரை தமிழ் சங்கத்தின்
செயலாளராகவும் பணியாற்றியவரே

மதுரை தீண்டாமை இயக்கத்தின்
தலைவராக இருந்து பாடுபட்ட
பாவலரே

வளத்தை அள்ளிக் கொடுக்கும்
வழக்கறிஞர் தொழிலை விடுத்து
தமிழுக்காக தன்னை அர்ப்பணித்த
அறிஞரே

உமக்கு ஈழநாட்டு புலவர்கள்
நாவலர் என
பட்டம் சூட்டி மகிழ்ந்தனரே
குறள் நெறிப்படி வாழவேண்டும் என
மக்களை ஊக்கப்படுத்திய உத்தமரே

சொல்லிலும் எழுத்திலும்
புரட்சி ஏற்படுத்திய பேரறிஞரே



தமிழர் தமிழன் என சொல்ல
வெட்கப்படுபவன் தமிழனா?
என  சொல்லால் சாட்டையடி கொடுத்து
தமிழன் நெஞ்சமதில்  தமிழர் என்று
உரமேற்றிய தமிழறிஞரே.

தீண்டாமை ஒரு பாவச்செயல்
இனியும் வேண்டாம் தீண்டாமை.
இதற்காக பாடுபட்ட பல தியாகிகளுக்கு
பூமித்தாயின் மீது என் சிரம் வைத்து
கரம் கூப்பி வணங்குகிறேன்.
நான் தமிழன் என்று பெருமையில்.

கவிஞர் கவிதாயினி சுமதி தசரதன்,சென்னை

# திலகவதியார்


(பாகம் இரண்டு)

பாடலிபுத்திரம் எனும் பதியை அடைந்தார் மருள்நீக்கியார்
பாடம் பயில நல்ல சமணப் பள்ளியில் சேர்ந்தார்
மடங்கள் தோறும் தங்கி சமணர்களின் கருத்து அறிந்தார்
வீடு அறியும் நெறி இதுவே மெய் என்று உணர்ந்தார்

அங்கும் அவரும் அரும் கலை நூல்கள் ஆய்ந்து தெளிந்தார்
பொங்கும் உணர்வுடன் சமணத் துறவிகளில் ஒருவரானார்
எங்கு சென்றாலும் சமணமே உயர்வுக்கு வழி, வாதிட்டார்
தங்களின் மேலான தலைவர் "தருமசேனர்" பெயர் பெற்றார்

பல்லவ மன்னன் மகேந்திர வர்மனால் பேரும் புகழும் பெர்றார்
அல்லல் படும் மக்கள் மனதில் சமணம் பேசி துன்பம் நீக்கினார்
தொல்லையிலா சமயம் சமணமே, பிரசாரம் செய்தார்
வெள்ளை ஆடையுடன் சமணர்களை பின் தொடரச் செய்தார்

திருவீரட்டானம் கோயில் திருப்பணியில் திலகவதியார்
அருந்துயரத்தில் தம்பியாரை நினைக்காத நேரமில்லை
உருகினாள் உடன் பிறப்பை நினைந்து நினைந்து
அருமை தமயனுக்காக வாழ நினைத்து அவன் இல்லையே



சிவசிந்தனையில் வளர்ந்த மருள்நீக்கியார் சிவனை விட்டதென்ன
தவமாய் வளர்த்த பிள்ளை சமண மதம் மாறி சென்றதென்ன
சிவம் ஒன்றே நெறிநின்ற திலகவதியார் இறையடி வேண்டி நின்றாள்
பாவம் அறியா அவன் மனதில் சிவம் குடியேற அருளவேண்டும்

நாளும்மிகும் பணிசெய்து வரும் திலகவதியார் கனவில் சிவன்
போதும் கவலை விடு சென்றவன் சிவாயநம என திரும்புவான்
பாலும் தேனும் கலந்ததுபோல் பதிகம் பாடி அருள் பெற வருவான்
மீளும் வழியறியாது சூலை நோயில் அவதியுற்று மீண்டு வருவான்

இறை கூற்றுப் படி சூலை நோயின் கடும் பிணியில் அவதியுற்றான்
முறை செய்த சமண மருத்துவமும் மந்திரமும் பலன் இல்லை
தரையில் புரண்டு வலியின் அனத்தலில் நினைத்தார் தமக்கையை
இறைவனை விட்டு மதம் மாறிய மனதை நொந்துகொண்டார்

பொல்லாத சூலை நோய் மருத்துவம் பலசெய்தும் தீரவில்லை
எல்லோரும் கைவிட்ட நிலயில் தன் நிலை கண்டு அஞ்சி நடுங்கினான்
நல்லாள் திலகவதியார் உடன் அழைத்துவர ஆள் அனுபபினார்
சொல்லாமல் சென்றவனே திரும்ப வர, பதில் அனுபபினார்

துடிதுடித்து சுழலும் சூலையுடன் நாடு விட்டு வீடு சேர்ந்தார்
முடிவில்லா வலியுடன் தமக்கையின் திருவீரட்டம் கோயில் வந்தார்
பிடிநீறு அள்ளி தமக்கை அஞ்சு எழுத்து ஓதி பூச சூலை மாயமானது
அடி தொழுது தேவாரப் பதிகம் பாடி திருநாவுக்கரசரானார்
திலகவதியாரும் திருவதிகையில் தொண்டு செய்து முத்தி எய்தினார்
திருநாவுக்கரசர் அருளிய தேடாரம், முதல் பதிகம்-
"கூற்று ஆயினவாறு விலக்ககிலீர் கொடுமை பலசெய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்து உறை அம்மானே"

(முற்றும்)

**கவிஞர் ந.திருக்காமு**

# பெறாத தந்தையே

அப்பா என்றுனை அழைத்ததில்லை
ஆசையாய் தொட்டுப் பேசியதில்லை
அன்பாய் அணைத்ததும் இல்லை.

அப்பா!
இன்று வாய் நிறைய அழைக்கிறேன்
உங்கள் செவிகளுக்கு எட்டுகிறதா?

பாசத்தை பிள்ளைகளுக்கு
பகிரத் தெரியாமல்தான்
கடுகடுவென்ற முகமூடி அணிந்தீரா?

அந்த கண்டிப்பிலும் உன்னன்பு
கரைகாணாததென அறிய முடியாதவர்களா நாங்கள்?

உற்ற நண்பனாய் எங்களுக்கு
என்றும் இருந்ததில்லைதான்- ஆனால்

நாங்கள் கற்ற பாடம் அத்தனையும்
உங்களைப் பார்த்து தானே.

நீங்களும் நாங்களும் கொண்டது
உணர்வில் மட்டுமே உணரும் பாசம்

தகப்பனன்பை இழந்து நின்ற
மகளின் தோழியையும்- உங்கள்
மகளென்று மனமார ஏற்றதற்கு

என்னால் கைம்மாறு செலுத்த இயலாது



இனி உங்கள் முகத்தை
காணலாகாது என்றதும் தான்
இத்தனை நாள் செய்யாததெல்லாம்
செய்ய உள்ளம் விழைகிறது

அதை உணராது உங்கள் உடலிருந்தாலும்
ஆன்மா உணருமென்ற நம்பிக்கை இருக்கிறது
என்னைப் பெற்ற தந்தையோடு ஐக்கியமான
பெறாத தந்தையே!

கவிஞர் அ.தசிகா தமிழ்,சேலம் மாவட்டம்

# தொலைந்து போன மனிதம்

அவசர உலகில்
அடுத்தவரை அறியோம்
அடுத்த வீட்டாரையும்
அந்நியராகவே கருதுவோம்
காலத்தைக் கடித்தே
நேரமும் சுருங்க
நட்பும் உறவுகளும்
வேஷமாகி விட்டன
அவரவர் தேவைகளில்
கரிசனை ஓங்கிட
ஆபத்தில் உதவுவதும்
அரிதாகி விட்டது



சிந்தையில் சீர்தூக்கி
உதவிட எண்ணல்
சீரிய வாழ்வுக்கு
அடித்தளம் ஆகுமே
துன்பத்தில் உருளுவோருக்கு
உதவிக்கரம் நீட்டி
முகநூலில் பதிவேற்றல்
நற் செயலன்று
வாழும் காலம் மிகவும் குறுகியது
மனிதம் பேணி மகிழ்ச்சி அடைவோம்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# ஈழத்து வேங்கையவள்


பதக்கத்தின் மீது மோகமா
கேடயத்தின் மீது காதலா
இல்லை தேசத்தை தலை நிமிர வைக்கும் நோக்கமா
வெற்றுக் கால்களுடன் மலைகளைத் தாண்டி
பட்டினி எனும் பிணியை தாங்கி
சோகங்களை சுகமாய் சுமந்த வீர நெஞ்சம்
பெண்ணாய் பிறந்ததால் கண்டதோ காடையரின் கண்கள்
தட்டிப் பாராட்ட வேண்டிய கரங்கள்
தொட்டு தாலாட்ட முனைந்திட
தயக்கமின்றி வஞ்சித்தாள் வஞ்ச நெஞ்சங்களை
ஏழ்மையின் பிடியில் தவழ்ந்து வளர்ந்தாலும்
துடிப்போடு துணிந்து எழுந்தது அவள் நெஞ்சம்
தான் நேசித்த தேசத்தை அலங்கரித்தாள்
தன் தேசத்தின் கீதத்தின் முன் அகிலத்தையே நிற்க வைத்தாள்.
கோடை விளையாட்டில் வெள்ளிப் பதக்க நாயகி
அவளே ஈழத்து வேங்கை சுசந்திக்கா  ஜெயசிங்க




கவிஞர் அமீன் பவாஸ்,இலங்கை

# துள்ளி குதிக்கும் துளிகள்

சாரலென வந்து அகம்
கொய்திடும்
எங்கோ பூத்த மலர்
மனலங்காரத்தில்
அரியாசனமிட்டு அமர்ந்து
கண்சிமிட்டும்
வேஷம் கட்டாது
வினாத்தொடுக்கும்
உரிமையில் உருக்கியே
உள்ளத்தில் புகுந்து



மாற்றுக் கருத்தை மனதார
ஏற்றிடும்
உள்வாங்கி உவமைக் கூறி
மகிழும்

சிறகடிக்கும் போதெல்லாம்
விரல் கோர்க்கும் மாயம்
சிதறும் நிலையில்
தலைக்கோதும்
கைத்தடம் மணக்கும்

புரிதல் புதிதாய் ஏதுமின்றி
உனை புரிந்தேனென
பொன்மொழிக் கூற்றில்
வியக்கும் வியப்பும்
நட்பும் நலமுடன் பூக்கும்
மலர்ந்து மணம் வீசிடும்

இனம் பார்க்காது நேரம் தேடாது
இமைத் தட்டிவிடாது
பற்றிடும் பரவசமும் பொங்கிட

பிரியாத பிணைப்பில்
பிணைத்திடும்
வரம் கேட்கும் மனமும்
சந்திக்கும் வேளையில்
தழுவிடும் பொழுதில்

இதயத்தினோசை இருப்பக்கமும்
இசைந்து இன்னிசைக்கும்
துளிகள் துளிர்த்து துள்ளிடும்
சுற்றம் மறந்து
சொல்லாடுமழகில்

மெய்மறந்து மேனிக்குள்
புது ரத்தம் பாயும்
அகலாது அணுவும் அசையாது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகலும் தமிழே!!

# மண் உண்டியல்

சீனி மிட்டாய் கேட்டு
சிறுவயதில் நான் அழுக
சிறுவாட்டு காசிலொரு
சில்லறையை எடுத்து
கொடுத்தால் அன்னை

பாதிகாசில் பஞ்சுமிட்டாய்
வாங்கி தின்றுவிட்டு
மீதியை மண்உண்டியில்
மறைத்து வைத்தேன்

கள்ளுகுடிக்க காசில்லை என்று
கல்லில் அடித்து
உடைத்து விட்டான்
உன் அப்பன் -என்று
மண்சில்லு ஒன்று
சொல்லியதொரு
சோகக் கதை




கவிஞர் விக்னேஷ் கலியமூர்த்தி,தஞ்சை

# கடல்வளம் காப்போம்!

புவியின் பரப்பினிலே பெரும்பங்கு நீர்ப்பரப்பே!
நீர்ப்பரப்பில் தொண்ணூற்று ஏழுசதம் கடல்நீரே!
புவியின் சமநிலையைக் காப்பது கடலாகும்!
தன்னலமிக்க மனிதர்களின் செயலால் மிகுவது
விண்ணிலும் மண்ணிலும் நெகிழிகளின் கழிவே!
அன்றாடம் பயன்படுத்தும் நெகிழிக் கழிவுகள்
ஆறுகளின் வழியாக அடைகிறதே கடலினையும்!
கடல்நீர் உயர்வதால் புவிக்கு அழிவே!
கடற்கரையில் வீசுகின்ற நெகிழிக் கழிவுகள்
கடலினுள் சேர்வது கவலைதரும் நிகழ்வாகும்!
பல்லுயிர் பெருக்கத்தின் உறைவிடம் கடலாகும்!
கோடிக் கணக்கான கடல்வாழ் உயிரிகளின்
உறைவிடமும், உணவிடமும் பவளப் பாறைகளே!
கழிவுகளால் அழிகிறதே பவளப் பாறைகளும்!!
ஆழ்கடலில் வாழும் அரியவகை ஆமைகள்,
பெரியவகை கடல் பசுக்கள், மீன்கள், திமிங்கலங்கள்
சுறாக்கள், கடற்பாசிகள் , புற்கள், ஆமைகளென
பெருகிடுதே அழியும் உயிரினங்கள் பட்டியலும்!
உயிர்ச்சூழல் சிதைந்து உணவுச்சங்கிலி அறுந்திடுதே!
கப்பல் போக்குவரத்தால் எண்ணெய்க் கசிவுகள்
தொழிற்சாலை பலவற்றால் இரசாயனக் கழிவுகள்,
தண்ணீரில் கலக்கும் நெகிழி நுண்துகள்கள்,
சூழல் கெடுவதால் சூடாகும் கடல்நீர்
கடல்வாழ் உயிரிகளின் இனப்பெருக்க நிகழ்வுகளைக்
கெடுக்கிறதே! ஏழுகண்டங்கள் இருப்பதை நாமறிவோம்!
எட்டாம் கண்டமாக பசிபிக் கடலில்
குப்பைக் கண்டம் நெகிழிக் கழிவுகளால்!
கண்டம்விட்டுக் கண்டம் பாயும் பறவைகள்
நெகிழிக் கழிவுகளை உண்பதனால் மடிகிறதே!
கடல்வளம் காக்க தவிர்ப்போமே நெகிழியினை!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# தெரியாது

இந்த வார்த்தையின் அர்த்தமும், அதிகாரமும் தெரியாததே
வாழும் நாட்களின் எண்ணிக்கையும் தெரியாது
யோசித்து பார்த்தால்
வாழ்ந்த நாட்களின் நினைவுகளும் தெரியாது
இந்த கவிதையின் கடைசி வரிகளும் தெரியாது
இந்த காலம் சொல்லும் பாதைகளும் தெரியாது
எழைகளிடம் புன்னகை தெரியாது
எஜமானிடம் நேர்மை தெரியாது
அலைகளுக்கு அமைதி தெரியாது
அரசியலுக்கு உண்மை தெரியாது
பார்வை இல்லாதவனுக்கு
பழி சொல்ல தெரியாது



பாவம்

பசித்த மனிதனுக்கு உணவின் ருசி தெரியாது
மூடும் கண்களுக்கு உதிக்கும் சூரியன் தெரியாது
குளிரும் இரவுக்கு சுட்டெரிக்கும் விழிகள் தெரியாது
தொலைந்த நாட்களுக்கு தொலைத்த நிமிடங்கள் தெரியாது
தேடிய வாழ்க்கைக்கு தீர்வுகள் தெரியாது
இறந்த மனிதனுக்கு இவ்வாழ்க்கையின் அர்த்தம் தெரியாது
பிறந்த குழந்தைக்கு வாழ்க்கை என்னவென்று தெரியாது



தெரியாது
இ(அ)வன் முடிவும் தெரியாது

கவிஞர் தேடல் மணி,நாமக்கல் மாவட்டம்

# முதிர் கன்னிகள்

திருமணத்தை நித்தமும் எதிர்பார்த்து
கனவுச் சிறைக்குள் அடைப்பட்ட
முதிர் கன்னிகள் நாங்கள்
பாரில் பிறந்தோம் பெண்ணாய்
பட்டங்கள் பலபெற்றோம்
பன்பை வளர்த்தும் நெஞ்சத்தில்
பாவையர் விழிகள் விடிவுக்கான விழிகளே
வறுமையில் நாம் பிறந்ததால்
வசந்தம் இல்லை நம் வாழ்வில்
பணத்தை தேடும் உள்ளங்களிடம்
பாசத்தை தேடி தோல்வி கண்டதால்
பாவையரின் எதிர்பார்ப்புகள் நொருங்கியதே
காளையரை விலைபேசி வாங்கிடவே
காசில்லா கன்னியர் வாழ்வை காப்பாற்ற
காளையர் யாரும் இங்கில்லையே
சொந்தங்கள் தூரமாகிப் போனதால்
சோகங்களும் சொந்தமாகிப் போகவே
சோதனையில் தினம் தினம் வெந்து
தேகமும் முதிர் கன்னி ஆனதே
ஆயிரமாயிரம் கனவுகளைச் சுமந்து
அன்பான துணைவனை எதிர்பார்த்து
அனைத்திலும் ஏமாற்றம் ஏற்படவே
வாழ்வும் கசந்ததால்
முதிர் கன்னி ஆனோமே
முடங்கித்தான் போனோமே
வரதட்சணை வாங்கும் காலமது மாறிப்போனால்
நம் வாழ்வும் சிறக்குமே
நானி குறுகி வீட்டில் அடைப்பட்ட காலம் போய்
முதிர் கன்னி எம் வாழ்வில் வசந்தம் வீசுமே
வரன் வந்து எம் வாசல் கதவை தட்டுமே
எதிர் பார்ப்பில் எம் வாழ்வு சிறக்குமே



கவிஞர் ரிஹானா ஹரிஸ்கான்,இலங்கை

# கோலம்

அலறிமணி அடிக்குமுன்னே துயில் எழுந்து
வாசல் நனைத்து மாக்கோலம் போடும்
பாட்டி வீட்டு வாசலின் வெற்றிடம்
சொல்லிற்று பாட்டி இறைவனடி சேர்ந்தாரென்று!



கவிஞர் எழிலி

# எதைக் கண்டும் மயங்காதே

எதைக் கண்டும் மயங்காதே நீ
எதற்கும் அளவுக்கு மீறி ஆசைப்படாதே
எல்லாம் நீ இழக்கப் போவதே - ஆம்
ஏற்றதையும் பெற்ற தையும் கூடத்தானே

ஏன் இந்த வாழ்க்கை விளையாட்டு உடன் புரியாது
அவள் அவன் தந்த மேடை நடித்து விட்டுப் போ
உன் என் ஆட்டமும் இதுவே நடிப்புடைய பாத்திரமே
கண் இரண்டு பார்வை ஒன்றுதானே

சிலவற்றை படைத்து பிடுங்கி விடுவான் உன்னிடம்
சிலவற்றை அளவுக்கு மீறி தந்தும் விளையாடுவான்
பல இடங்களில்அவன் வறுமையில் வாட்டி ஆட்டுவான்
நலமே பொதுநலம் என்பவருக்கு அவன் பக்கத்துணையாவான்

எதுவும் நிரந்தரம் இல்லை உனது வாழ்க்கையில்
அதுவும் அவனின் அறிவு கீதையில் இதுஒன்று
மனது தெளிவாக இருந்தாலே போதும் இதை வெல்ல
எனது கருத்து இதுவே நீ ஏற்றாலும் சரி உடன் ஏற்காவிட்டாலும் சரி



கவிஞர் அஞ்சல் தஞ்சைதாசன்,மடிப்பாக்கம் 91

# நினைவும் திரும்புமா

கூடிய நட்பில்
குலவிடும் கூடல்
ஆடியும் பாடியும்
ஆனந்தம் கொண்டாடி
சிறுவர்கள் கிராமத்தில்
தெருவோடு மகிழ்ச்சியில்
ஆற்றோடு நீராடி
அருமையாய் மகிழ்தாடி



நுங்கு கோம்பை
நூதன வண்டி
டயரும் சக்கரமாய்
தடம் உருட்டி
பம்ரம் சுற்றியும்
பலவித்தை காண்பித்து
கிட்டிப்புள்ளும் கிளித்தட்டும்
கிறுகிறுப்பாய் பாய்ந்தாடி



காகிதக் கப்பலும்
மழை நீரோட
ஓடமாய் ஓட்டி
ஒய்யாரமாய் விளையாடி
தென்றலும் தெம்மாங்கு பாட
பட்டமும் கட்டி
பலர் போட்டியிட்டு
பார்த்திட ஏற்றிவிட்டு

உற்சாகம் உல்லாசம்
சந்தோஷம் கொண்டாடி
உறவான நாட்புகளும்
உள்ளத்தில் நினைவாடி
அன்றய விளையாட்டும்
அடியோடு மறந்தாடா
இன்றய நிலையில்
தொலைபேசி சிறுவர்களுக்கு
சினேகிதம் ஆனதடா

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# வலைக்குள்ளே வாழ்க்கை

குடும்பமாய் இணைந்து குதூகலமாய் இருந்தோம்
காலங்கள் மாற தனியாகப் பிரிந்தோம்

கூட்டாகச் சேர்ந்து விளையாடி மகிழ்ந்தோமன்று
காட்டாறு போல வரையறைகள் மறந்தோமின்று

விஞ்ஞான ஏற்றம் பலவகை மாற்றம்
வீணான நாட்டம் விளைவுகளோ நட்டம்

இணையச் சிறையில் ஓய்வில்லா வேட்கை
இதய அறையில் தேய்வாகும் வாழ்க்கை



முகம் பார்த்துப்பேச நேரம் எங்கே
முகநூலில் கழியும் பொழுதுகள் இங்கே

விடிகாலைப் பொழுதும் தொலைபேசி திரையில்
முடியாத பிணைப்பு முடிவாகும் வினையில்

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
அறிஞர் சொற் கேட்டு நீயும் அஞ்சு

தீமைகள் தவிர்த்து நன்மைகளைத் தேடு
தொலையாதிருப்பாய் நீ பொல்லாத் தொலைபேசியோடு

கவிஞர் மக்கொனையூராள்,இலங்கை

# மயக்கம் என்ன?

சிந்தனையே சற்று விரதம் மேற்கொள்;
இலக்கணங்கள் மறந்து காற்று போல் உலவு;
மயக்கம் என்ன என்ற வினாக்கள் வேண்டாம்;
மறக்கவைக்கும் அம்மயக்கமானது தந்திடும் பேரமைதியும்;
உணரப்போகும் பேரின்ப விருந்தினை சுவைத்திட மயங்கிடு!



கவிஞர் நூருல் நய்மா அனஸ்

# ஒன்றுபடுதலில் உறுதிக்கொள்வோம்

முடிவில்லா பயணமிது இதில்
விடிவில்லா பயணிகளாக நாம்
சமுதாய சந்தையை பாதுக்காக்க
சமத்துவ, சமதர்ம கொள்கையின்றி

சமாதானமே எம் நோக்காய்
சாதி சமயம் பாராது
சகோதரத்துவ ஒற்றுமைக்காய் நாமும்

சீனப்பெருஞ்சுவராய் நீள வேண்டும்
சித்திர சிந்தையில் உருவான சமூக தொண்டு



பின்னணியற்ற கோட்பாட்டில்
முன்னணியாய் வலம் வர
அவனியிலே ஒன்று சேர்ந்தோம்
சமூகசேவை எனும் தன்னலமற்ற
உயர் சிந்தையால்.

நாடும் வளர
நாமும் வளர
ஒன்றுப்படுத்தலிலே உறுதிக்கொள்வோம்.


கவிஞர் சஸ்னா ஹசின்,இலங்கை(புத்தளம்)

# பணத்தில் இல்லை மகிழ்ச்சி

மனத்தில்
என்பதை
எடுத்தியம்பும்
அழகிய நிழற்படம்.

உவகை கொள்ள
உலகையே
கொணரத்
தேவையில்லை.


துளி நேசத்திலே
விழிகளை விரிய வைத்து.



சிறகின்றிப் பறக்கும்
சிறார்களின்
மகிழ்வு கண்டு
மகிழும் பெருங்குணம்
பேரழகு.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்

# நவீனத் தமிழ்க்கவிதையின் முன்னோடி
# சி.மணி



சி.மணி (1936 - 2009) தமிழில் புதுக்கவிதைகளும் கவிதை பற்றிய கட்டுரைகளும் எழுதிய கவிஞர். நவீனத் தமிழ்க்கவிதையின் முன்னோடிகளில் ஒருவராக கருதப்படுகிறார். எழுத்து இதழில் இருந்து எழுதத் தொடங்கிய சி.மணி பின்னர் நடை என்னும் சிற்றிதழையும் நடத்தினார்.

## பிறப்பு, கல்வி

சி.மணியின் இயற்பெயர் சி.பழனிச்சாமி. 1936-ல் சேலத்தில் பிறந்தார்.

## தனிவாழ்க்கை

சி.மணி ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். சி.மணி மதம்சாரா ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். ஹோமியோபதி மருத்துவத்தில் பட்டம்பெற்றிருந்தார் என்றும், சோதிடத்தில் ஆர்வம் கொண்டவர், தன்னுடன் வாசன் பஞ்சாங்கத்தை வைத்திருப்பார் என்றும் சாகிப் கிரான் குறிப்பிடுகிறார்.

## இலக்கிய வாழ்க்கை

கவிஞர் சி. மணி டி.எஸ். எலியடின் சிந்தனைகளால் பெரிதும் கவரப்பட்டார். 1959-ல் எழுத்து சிற்றிதழ் தொடங்கப்பட்டு புதுக்கவிதை கருதுகோள்கள் பேசப்பட்டபோது சி.மணி அதில் தீவிரமாக ஈடுபட்டார். சி.பழனிச்சாமி என்னும் பெயரிலும் அதில் அவருடைய கவிதைகள் பிரசுரமாகியிருக்கின்றன. சி.மணி என்ற பெயரில் வெளியான குகை என்னும் கவிதை கவனிக்கப்பட்டது.

# நவீனத் தமிழ்க்கவிதையின் முன்னோடி
# சி.மணி

**இலக்கிய வாழ்க்கை**

தொடர்ச்சியாக கவிதைகள் எழுதிய சி.மணி டி.எஸ்.எலியட்டின் The Waste Land[1] என்னும் நீள்கவிதையின் பாதிப்பில் 1962-ல் எழுத்து இதழில் நரகம் என்னும் நீள்கவிதையை எழுதினார். தமிழில் ஒரு சாதனை என எழுத்து இதழ் அதை குறிப்பிட்டது. தானே நடத்திய நடை இதழில் யாப்பும் கவிதையும் என்னும் தலைப்பில் விரிவாக நவீனக் கவிதையின் யாப்புமுறை பற்றியும் மரபுக்கும் அதற்குமான உறவு பற்றியும் எழுதினார்.

**இதழியல்**

சி.மணி நண்பர்களுடன் இணைந்து நடை என்னும் சிற்றிதழை சேலத்தில் இருந்து 1968-1969-ல் நடத்தினார்.

**விருதுகள்**

- மு.கருணாநிதி பொற்கிழி விருது
- மொழிபெயர்ப்புக்கான தமிழ்ப்பல்கலைக்கழகப் பரிசு 1983, 1985
- ஆசான் கவிதை விருது
- கவிஞர் சிற்பி விருது
- "விளக்கு" இலக்கிய விருது 2002

**இலக்கிய இடம்**

தமிழ்ப் புதுக்கவிதை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர் சி.மணி.யாப்பிலிருந்து கவிதை உரைநடை நோக்கி நகர்ந்த காலப் பகுதியில் அதிகம் எழுதியவர்.

# நவீனத் தமிழ்க்கவிதையின் முன்னோடி
# சி.மணி

## இலக்கிய இடம்

புதுவடிவத்தை நிலைநிறுத்தும் வகையில் கோட்பாட்டுப் பின்னணியை உருவாக்க விரும்பிய ந. பிச்சமூர்த்தி , க.நா.சுப்ரமணியம், சி.சு. செல்லப்பா ஆகியோருடன் கவிதையியல் பற்றி விவாதித்தவர்.'யாப்பும் கவிதையும்' என்ற மணியின் நூல்தான் புதுக்கவிதை பற்றிய முதலாவது ஆய்வு நூல். யாப்பிலிருந்து விடுப்பட்டதுதான் புதுக்கவிதை என்று நிறுவினாலும் அதில் மரபின் தொடர்ச்சியைக் காணமுடியும் என்று ருசுப்படுத்தியவரும் அவர்தான். அதை வெறும் கருத்தாக்கமாக மட்டுமல்லாமல் படைப்பின் ஆதாரத்துடனும் முன்வைத்தார். அவரைத் தவிர்த்த முன்னோடிகள் பலரும் உரைநடை சார்ந்த மொழியைக் கவிதைக்குப் பயன்படுத்தியபோது செய்யுளின் நடையை மறுவார்ப்புச் செய்தவர் சி.மணி என்று சுகுமாரன் குறிப்பிடுகிறார்.

சி.மணி மொழிபெயர்ப்பாளராகவும் முக்கியமானவர். இந்திய தத்துவ இயலிலும், மேற்கத்திய மதம்சாரா ஆன்மிகத்திலும் ஈடுபாடுகொண்டவர். தாவோ தே ஜிங் அவருடைய குறிப்பிடத்தக்க மொழியாக்கம்.

## ஹைக்கூ கவிதைகள்

நீட்சியாகவும், நிகழ்காலத்தின் நவீன கூறுகளையும் ஒருங்கே ஒற்றைப் புள்ளியில் குவித்து, தமிழ்க் கவிதை இதுவரை அறிந்திராத புத்தம் புதிய கவிதை மொழியொன்றினைத் தன் கவிதைகளில் சாத்தியமாக்கிக் காட்டினார் சி.மணி. தமிழ்ப் புதுக்கவிதையில் முதன்முதலாக சர்ரியலிசக் கொண்ட கவிதைகளையும் படைத்தவர் சி.மணி தான்.

மகாகவி பாரதி 1916-இல் அறிமுகக் கட்டுரையாக ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள் பற்றி எழுதிய குறுங்கட்டுரைக்குப் பிறகு, தமிழில் வேறெந்த பதிவுகளுமில்லை.

**ஹைக்கூ கவிதைகள்**

அரை நூற்றாண்டுக் காலம் நிலவிய கனத்த மௌனத்தைக் கிழித்துக்கொண்டு, 1966-இல் 'கணையாழி' இதழில் சில ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளை ஆங்கில வழி தமிழாக்கித் தந்தார் சி.மணி.

படகுக்கு மேலே
காட்டு வாத்துகளின்
வயிறுகள்.



அந்தமாதி ஒரு நிலவு
சற்று நிற்கிறான் திருடன்
பாட

எனும் 'ஹைக்கூவின் தந்தை' பாஷோ எழுதிய இரு ஹைக்கூ கவிதைகளை மொழிபெயர்த்தார். இக்கவிதைகள் பலரையும் ஈர்த்தன. பிறகு, 1968-இல் கவிஞரே தொடங்கிய 'நடை' (அக்டோபர்) இதழிலும் பத்து ஹைக்கூ கவிதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டார். அதிலொன்று;

திருடன் விட்டுச் சென்றது
இதுவே;
பலகணி



அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நிதானம் தவறும் போதெல்லாம்
ஒன்றைமட்டும் நினைவில் கொள்ளுங்கள்
வார்த்தைகள் கூர்மையானது
நம்மை எப்போதும் சிதைக்கக் கூடும்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com